IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

O.S.No. :169 of 2022

P.W. : 1

Witness Name : திரு.ராஜா

Date : 08.08.2024

**குறுக்கு விசாரணை**

நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு சொத்துக்கள் உள்ளது. 3 ஏக்கர் நிலமுள்ளது. என்னுடைய பிரதான வேலையே கூலி வேலை செய்வது தான். என்னுடைய பிரமாண வாக்குமுலத்தில் தாவா சொத்து யாருக்கு சொந்தம், அது எப்படி பாத்தியம என்று சொல்லியிருக்கிறேன். பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில தாவா சொத்துக்கள பிரதிவாதிக்கு எப்படி சொந்தமானது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில தாவா கிரைய ஒப்பந்தத்திற்கு எவ்வளவு முத்திரை தாள்கள்வாங்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொத்து விவரமே சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2) தாவா சொத்தின் பட்டா எண் எனக்கு நியாபகம் இல்லை. சர்வே எண் எனக்கு தெரியாது. எனக்கு படிப்பறிவு இல்லை. தாவா சொத்துக்களை நான் பார்த்தேன். ஆனால் செக்குபந்திகள் எனக்கு தெரியாது. தாவா சொத்து எந்த திசையை நோக்கி அமைந்துள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து தடங்கம் பஞ்சாயத்திற்குட்பட்டது. கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு மூன்று நாட்கள் முன்பாக நான் இடத்தை சென்று பார்த்தேன். நான் 10லட்சத்தை வீட்டில் வைத்திருந்தேன். நான் வருமான வரி எதுவும் கட்டுவதில்லை. 10 லட்சம் வீட்டில் வைத்திருந்ததற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. விலைபேசுவதற்கு பெருமாள், கோவிந்தன், மாதேஷ், நான் போனோம். தாவா சொத்தை ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக வில்லங்க சான்று போட்டு பார்த்தேன். ஆனால் அதை தாக்கல் செய்யவில்லை.

3) நான் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்க சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. கோவிந்தன், பெருமாளை அழைத்து கொண்டு பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று கிரைய ஒப்பந்தம் போட்ட 3 மாதம் கழித்து கேட்டேன். நான் போய் கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தமே மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும், ரூபாய் 10 லட்சம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல,. எனக்கு 10 லட்சம் கொடுக்கும் அளவிற்கு வசதியில்லை என்றால் சரியல்ல. நான் கடை

வைத்துள்ளேன். விவசாயம் செய்கிறேன். வா.சா.ஆ.*1* கிரைய ஒப்பந்தமே மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.